# தமிழ்நாடு அரசு
## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
## வட்டாட்சியர் அலுவலகம், சிவகிரி, தென்காசி மாவட்டம்.

அறிவிக்கை எண்/988/2025–A4 நாள்: 09.10.2025

தென்காசி மாவட்ட வருவாய் அலகு, சிவகிரி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் செய்வதற்கான இவ்வலுவலக அறிவிக்கை எண் 988/2025.A4, நாள்:12.07.2025.இன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு பணி 17.09.2025 முதல் 20.09.2025 வரை நடைபெற்றது. இந்நிலையில் தற்போது சென்னை கூடுதல் தலைமை செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் .ந.கவ.நி.2(2)/02/28–01 2024, நாள்:22.09.2025–ன் படி கிராம உதவியாளர் பதவிக்கான உச்ச வயது வரம்பு உயர்த்தி கடிதம் வரப்பெற்றுள்ளதன் பேரில் தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண் 988/2025–A4, நாள்: 12.07.2025–இன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மற்றும் வாசித்தல், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை தந்த விண்ணப்பத்தாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கீழ்க்காணும் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து **10.10.2025 முதல் 24.10.2025 மாலை 05.45 மணிக்குள்** சிவகிரி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப் பெறும் வகையில் விண்ணப்பம் செய்ய வேண்டும். நேரம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. ஒரு நபர் ஒரு கிராமத்திற்கு மட்டும் விண்ணப்பம் செய்ய வேண்டும். எனவே கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**1. பணி விவரம்**

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் – Level 06 (ரூ.11,100–ரூ.35,100) |
| வட்டத்தின் பெயர் | சிவகிரி |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 03<br>1. பட்டக்குறிச்சி,<br>2. இராயகிரி பாகம் 2<br>3. விஸ்வநாதபேரி பாகம் 1 |

**2. இன சுழற்சி விவரம்**

| வ. எண் | இன சுழற்சி | கிராமத்தின் பெயர் | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமை அற்றவர் | பொது ஆண் / பெண் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 19 | பட்டக்குறிச்சி | பொதுப் பிரிவினர் | முன்னுரிமை அற்றவர் | பெண் | தமிழ் வழிக்கல்வி |
| 02 | 20 | இராயகிரி பாகம் 2 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை | பொது | |
| 03 | 21 | விஸ்வநாதபேரி பாகம் 1 | பொதுப் பிரிவினர் | முன்னுரிமை | பொது | |

**3. கல்வித்தகுதி**

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC) Secondary School Leaving Certificate Examination ) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு ((SSLC) Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

**4. வயது 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும்**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பொதுப் பிரிவினர் | 21 | 32 |
| 2 | மிகவும் பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்/ பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3 | பட்டியலினத்தவர்/பழங்குடியினர்/ஆதரவற்ற விதவை | 21 | 42 |
| மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். (Tamilnadu Government Servants (Condititions of Service) Act–2016) | | | |
| முன்னாள் இராணுவ பொதுப் பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும், இதரப் பிரிவினருக்கு (ST/ SC(A)/SC/MBC/DNC/BC/BC(M) 55 வயதும் வழங்கப்படும். | | | |

**6. இதர தகுதிகள்/நிபந்தனைகள்**

இவ்வலுவலக அறிவிக்கை எண். 988/2025–A4, நாள்:12.07.2025–இல் குறிப்பிட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்.

**வருவாய் வட்டாட்சியர்**
சிவகிரி

Scanned with OKEN Scanner